# பிடபெத்தர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 02 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 29 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

----------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பிடபெத்தர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 97,660 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பாதை தகர்க்கும் இயந்திரம் மற்றும் பெகோ இயந்திரம் வாடகைக்கு வழங்கும் போது முற்பணம் ஒன்றாகப் பெற்றிருந்த ரூபா 22,500 தொகை மீளாய்வாண்டின் குறிப்பிட்ட வரவு தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூப 3,176,922 இற்கான வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் அப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கும் போது, குறிப்பிட்ட செலவு விடயங்களுக்கு வழங்கள்கள் பத்திரத்தின் மூலம் வரவு வைக்கப்பட்டு செலவுப் பகுப்பாய்வு ஒன்றின் மூலம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் ஆரம்ப மீதியுடன் கொள்வனவுகளைக் கூட்டி இறுதி இருப்பினை கழித்தவுடன் கிடைக்கும் பெறுமதி ஆண்டிற்கான செலவுகள் என வருமானச் செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,299,841 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,539,889 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 6,759,952 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் பதிவேடு மற்றும் சமர்ப்பித்திருந்த பட்டோலை இடையே 6 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 204,149 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,555,015 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,650,050 ஆகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

ரூபா 6,120,260 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வோர் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்ளவதற்கு தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,470,127 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,404,174 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- |
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி | 1,041 | 1,051 | 203 |
| வாடகை | 4,593 | 3,062 | 1,016 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 321 | 372 | 70 |
| ஏனைய வருமானம் | 18,830 | 23,698 | 10,810 |

2.2.2 வீத வரி

----------------

2010 பெப்ரவரி 08 திகதிய இலக்கம் 1641/41 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த 04 கிராமசேவகர் பிரிவுகள்

நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் முன்னேறிய பகுதி என பகிரங்கப்படுத்தி இருந்த போதும் அப் பகுதிகளில் வீதவரி அறவீடு செய்வதற்கான முன் நடவடிக்கைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படாமையால் 2010 பெப்ரவரி மாதம் முதல் 2013 திசெம்பர் 31 திகதி வரை அதாவது சுமார் 04 வருடங்களுக்கான வீதவரி வருமானத்தினை இழக்க நேரிட்டுள்ளது.

2.2.3 ஏக்கர் வரி

-------------------

2013 ஜனவரி 01 உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 193,444 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவை மிகை விதிப்புக்களுடன் ரூபா 30,303 ஆகும். பில்போடப்பட்ட தொகையில் ரூபா 7,592 வும், நிலுவை தொகையில் ரூபா 12,415 வும் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருந்ததுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 25 மற்றும் நூற்றிற்கு 6 ஆகிய சிறிய பெறுமதியை கொண்டவையாகவே காணப்பட்டது.

2.2.4 வர்த்தக வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------------------------------

முன்னைய பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ரூபா 70,552 இற்கான நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 நீர்க் கட்டணம்

------------------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நீர்க் கட்டணம் ரூபா 1,186,827 தொகையில் இருந்து ரூபா 501,259 மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 42 ஆகும்.

2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செலயாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,590,429 காணப்பட்டது. அவை பின்வருமாறு

| | ரூபா. |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 2,738,612 |
| முத்திரைக் கட்டணம் | 6,851,817 |
| | 9,590,429 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------

2005 மார்ச் 31 திகதி 08/2005 கொண்ட பொது நிருவாகச் செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரிவு 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்பட்ட நூற்றிற்கு 4.2 வட்டி வீதம் அவை இடையிலான வித்தியாசத்தை அரசினால்

மீளளிப்பு செய்ய வேண்டும். எனினும் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்யப்படாத தொகை ரூபா 237,517 ஆகும்.

3.2 அதிகாரம் பெற்றிராத கொடுக்கல் வாங்கல்கள்

---

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒரு மதம்சார் விழா அல்லது பொதுசன முக்கியத்துவமுடைய பண்பாட்டு, சுகாதார, விஞ்ஞான சார் அல்லது கல்வி சார் விடயம் ஒன்றிற்காக ரூபா 1,000 இற்கு மிகையான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்படுமிடத்து அதற்காக உரிய அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும். எனினும் அவ்வாறான அங்கீகாரம் ஒன்றினைப் பெறாமல் 2013 ஆண்டின் போது ரூபா 192,194 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த மற்றும் வேறேதேனும் அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்ட 11 ஊழியர்களுக்கு 2013 நவம்பர் மாதம் 2013 ஜனவரி 01 முதல் செயற்படுமாறு நிரந்தரப்படுத்தியிருந்தன. அவ் ஊழியர்களுக்கு 2013 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 139,320 ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டும். எனினும் 2014 அக்டோபர் 30 திகதி வரை அத் தொகை திருப்பி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் போது வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 71,280 தொகையும், வீதி விளக்குகள் பராமரிப்பாளருக்கு ரூபா 30,300 தொகையும் ஆக மொத்தம் ரூபா 101,580 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும் 2013 ஆண்டின் போது மின்சார சபையில் இருந்து ஒரு தொகையேனும் மீளளிப்புச் செய்திருக்கவில்லை. எனவே முழுத்தொகை சபை நிதியத்திற்கு செலவுப் பொறுப்பொன்றாக மாறியுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது வங்கி நடைமுறைக் கணக்குகளில் இருந்து பணமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த தொகை ரூபா 1,229,275 ஆகும்.

3.4 மனித வள முகாமைத்துவம்

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | | |
| மூன்றாம் தர | 01 | 02 | | 01 |
| இரண்டாம் தர | 22 | 19 | 03 | |
| ஆரம்ப தர | 29 | 26 | 03 | |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 05 | | 05 |
| | 53 | 53 | 06 | 06 |

மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பதவியணி சம்பளம் மந்திரிமார் படி ஆக ரூபா 10,144,900 தொகையொன்று (மோட்டார் சைக்கில் கடன் தவணை

அறவீடுகளுடன்) மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் படியாக ரூபா 13,041,689 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 2,896,785 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

-----------------------------------------------------------

4.1 செயற்பாட்டுத் திட்டம்

----------------------------------

செயற்பாட்டுத் திட்டமொன்று சபை தயாரித்திருக்கவில்லை.

4.2 அகக் கணக்காய்வு

---------------------------------

சபை போதியளவு அகக் கணக்காய்வு ஒன்றினை தயாரித்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

--------------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.4 கொள்வனவுத் திட்டம்

---------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக 2006 ஜனவரி 25 திகதிய இலக்கம் ஜீ.பிர.நி/பி.வி.நி/18 கொண்ட சுற்று நிருபம் 42(ஆ) பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்